# இறைத்தூதன்

## கத்தோலிக்க வார இதழ்


ஆன்மாவைக் கொல்ல இயலாமல், உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்ச வேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள். காசுக்கு இரண்டு சிட்டுக் குருவிகள் விற்பது இல்லையா? எனினும் அவற்றுள் ஒன்றுகூட உங்கள் தந்தையின் விருப்பமின்றித் தரையில் விழாது. உங்கள் தலைமுடி எல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றது. சிட்டுக் குருவிகள் பலவற்றைவிட நீங்கள் மேலானவர்கள். எனவே அஞ்சாதிருங்கள்.

*(மத் 10:28-31)*

# மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி பேரவைக்கு, மறைவட்ட அளவிலான தயாரிப்பு பேரவைகள் நடைபெற்றன

## ஆயர் பெனர்ட் பவுல் அவர்களின் செய்தி

ஜொகூர் பாரு: "1976ல் நடைபெற்ற அஜியோர்ன மெந்தோ எனும் மறுமலர்ச்சி மாநாட்டிலிருந்து மலேசிய திருஅவையின் வரலாற்றில் இப்போது ஒரு புதிய அத்தியாயத்திற்கு நகர்கிறோம்" என்று கடந்த ஜூன் 5ஆம் தேதி, மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் மூன்று மறைவட்டங்களில் நடைபெற்ற மேய்ப்புப்பணி பேரவையின் திறப்பு நிகழ்ச்சியில் ஆயர் பெர்னர்ட் அவர்கள் மேற்கண்டவாறு கூறினார். ஆயரின் பேரவையின் திறப்பு உரை ஒரே சமயத்தில் மூன்று மறைவட்டங்களிலும் காணொளியின் வழி ஒளிபரப்பப்பட்டது.

அவர் தொடர்ந்து, 2024-ல் நடைபெறவுள்ள தீபகற்ப மலேசிய மேய்ப்புப்பணி பேரவைதான் இறுதி பேரவையாக இருக்கும் என்றும், இதில், அருள்பணியாளர்களும், துறவறத்தாரும், பொதுநிலையினரும் இணைந்து தீபகற்ப மலேசியாவின் எதிர்கால பயணத்திற் கான வழிமுறையை கண்டறிவர் என்று மேலும் விவரித்தார். அதன்பின், மலேசிய திருஅவை தீபகற்ப மலேசியா, கிழக்கு மலேசியா என்றில்லாமல், ஒரே மலேசிய திருஅவையாக, மலேசியர் மேய்ப்புப்பணி பேரவை என 2026-ல் ஒன்றுகூடும் என்றார்.

இதற்குத் தயாராகும் வகையில், அனைத்து மறைமாவட்டங்களும் குடும்பம், திருஅவை, சூழலியல் மற்றும் சமூகம் ஆகிய நான்கு பகுதிகளை மையமாகக் கொண்டு தங்கள் மறைமாவட்டக் கூட்டங்களை நடத்தும் என்றும், இதனையொட்டி மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டமானது, அதன் தெற்கு ஜொகூர், மத்திய ஜொகூர், மற்றும் மலாக்கா என பிரிக்கப்பட்டிருக்கும் மூன்று மறைவட்டங்களில் அவற்றின் முதல் கட்ட மேய்ப்புப்பணி மாநாடுகளை நடத்தும் என்றும், அதன்பின் வருகிற அக்டோபர் 14-ம் திகதி மறைமாவட்ட அளவில் பொது மேய்ப்புப்பணி மாநாடு நடத்தப்படும் என்று எடுத்துரைத்தார்.

"இந்த மறைமாவட்டத்தின் திருஅவையாக நமது பணியில் ஒரு முக்கிய மறைதூது

குடும்பங்களின் ஒன்றிப்பைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே நமது தலையாயக் குறிக்கோள் என்றுரைத்தார்.

ஆயர் பெனர்ட் பவுல் அவர்கள், மேய்ப்புப் பணி பேரவையில் கலந்துகொள்ளவிருக்கும் பிரதிநிதிகளின் பங்களிப்பின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.



*காணொளி வழி உரையாற்றும் ஆயர் பெனர்ட் பவுல்*

அம்சம் என்வென்றால், குடும்பங்களின் ஒன்றிப்பை நிலை நாட்டுவதாகும். திருஅவையாகிய நாம், ஆக்கப்பூர்வமான, அனைவரையும் உள்ளடக்கிய, உறவுகளை மேம்படுத்துதல் அத்துடன், தொலை நோக்கு சிந்தனையோடும். மறைத்தூது நோக்கு டனும் 'எதிர்நோக்கின் சீடர்களாக' முன்னோக்கிச் செல்லும் வேளையில், மேற்கூறப்பட்ட அந்த குடும்பம், திருஅவை, சூழலியல் மற்றும் சமூகம் எனும் நான்கு ரீதிகளில், மறை மாவட்டத்திற்கு ஒரு உறுதியான மேய்ப்புப்பணிக்கான வழிகாட்டுதலை அவர்கள் வழங்க வேண்டும் என்பது நமது எதிர்ப்பார்ப்பாகும் என்றார். இந்த ஆய்வுகளின் கண்டுபிடிப்புகளை மறைமாவட்ட மேய்ப்புப்பணி குழு ஆய்வு செய்து, அடுத்து 14 அக்டோபரில் நடைபெறவுள்ள மறைமாவட்ட அளவிலான மேய்ப்புப் புணி மாநாட்டில் சீர்ப்படுத்தி ஏற்றுக்கொள்ளும் என்றும் கருத்துரைத்தார்.

இந்த மறைவட்ட அளவிலான மேய்ப்புப் பணி பேரவைகள் மறைமாவட்டத்தின் ஒன்றித்த பயணத்தையும் அவற்றுக்கிடையிலான உறவையும் உறுதிப்படுத்துவதாகவும் அமையும் என்றார்.

அடுத்து, திருமுழுக்கின் வழியாக நாம் யேசு கிறிஸ்துவின் முப்பணிகளான அரச, குருத்துவ மற்றும் இறைவாக்குப் பணிகளில் ஈடுபட வேண்டியுள்ளது. "திருஅவையில் இறையரசைக் கட்டியெழுப்புவதில் எங்களுக்கும் சிறப்புப் பங்கு உள்ளது.

- "அருள்பணியாளர்களாக, நாங்களும் இந்த மேய்ப்புப்பணி பேரவையில், இறைவேண்டல்கள் மற்றும் புனிதமிகு சாட்சியாக பங்கேற்கவுள்ளோம்.
- இறைவாக்கினர்களாக, நாங்கள் இங்கே ஆண்டவரின் சீடர்களாகவும், கடவுளின் மக்களாகவும் நம் நம்பிக்கையைப் பாதுகாக்க எப்போதும் உடன் இருக்கிறாம்.
- அரசர்களாக, நாங்கள் கடவுளின் அரசையும் கிறிஸ்துவின் திருவையையும் எங்கள் சேவை மூலம் கட்டி எழுப்புகிறோம்.

நிறைவாக, நமது ஆய்வின் போது திறந்த மனதுடனும் நேர்மையுடனும் செயலாற்றுவோம் என்று ஆயர் அவர்கள் உறுதிபூண்டார்.

*தமிழாக்கம் ஆர்.கே.*

# ரவாங்கில் கிறிஸ்துவின் திருவுடல், திரு இரத்தம் பெருவிழா (நற்கருணை) கொண்டாட்டம்

**ரவாங்:** இங்குள்ள புனித யூதா ததேயு தேவாலயத்தில் கடந்த ஜூன் 10, 2023 சனிக்கிழமையன்று, கிறிஸ்துவின் திரு உடல், திரு இரத்தம் பெருவிழா பன்மொழி திருப்பலியாக கொண்டாடப்பட்டது. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திரு



*அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் நற்கருணை*

உடலும், தூய இரத்தமுமே நமக்கு அப்ப மற்றும் ரசமாக வழங்கப்படுவதன் உண்மை மறை பொருளை பறைசாற்றுவதற்காக இப் பெருவிழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

திருப்பலிக்கு பிறகு இந்த பங்கில் நீண்ட காலமாக சேவையாற்றும் 6 பேரை விருது வழங்கி கௌரப்படுத்தியது. ஆலயத்தில் பல்வேறு பணிக்குழுக்களில் இவர்கள் பணியாற்றியுள்ளனர், இதில் சிலர் இன்னமும் பங்கில் அயராது தங்கள் சேவைகளை வழங்குகிறார்கள். இந்த ஆண்டு கௌரப்படுத்தப் பெற்றவர்களின் பெயர்ப்பட்டியலை அடுத்தப்பக்கம் காணலாம்.

பாராட்டு விருதுகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து ஏறக்குறைய 1,200 இறை



*தூய நற்கருணையை ஏந்தி வரும் அருட்பணி வின்சென் தோமஸ்*

சமூகத்தினர் சாலையில் தூய நற்கருணை பவனியில் பக்தியுடன் பங்கேற்றனர்.

*தொடர்ச்சி-அடுத்துப் பக்கம்*

## ரவாங்கில் கிறிஸ்துவின் திருவுடல், திரு இரத்தம் பெருவிழா நற்கருணை கொண்டாட்டம்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில், இயேசுவின் திருவுடல் திரு இரத்தமான நற்கருணை கதிர்பாத்திரத்தில் வைக்கப்பட்டு, பலிபீடச் சிறுவர்கள் முன் செல்ல, நேர்த்தியாக இரு வரிசைகளில் மலர் தூவிய வண்ணம் பவனியாக எடுத்துச்செல்லப்பட்டது.

விழா ஏற்பாட்டுக்குழு தலைவர் சகோ. பத்திநாதன் இருதயம் பேசுகையில், நாம் புனித யூதாவுக்கு வணக்கம் செலுத்தும் வேளையில், உயிருள்ள ஆண்டவரை நற்கருணையில் வழிபடுகிறோம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்றார். பவனியின்போது, மூன்று வெவ்வேறு இடங்களில் பங்குத்தந்தை வின்சென் தோமஸ் அவர்கள் தூய நற்கருணையை சற்று மேலே உயர்த்தினார். இந்த பவனியில், பங்கு இறைமக்கள் மட்டுமின்றி பொது மக்களும் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் மேலும் கூறுகையில் பங்கு இறைமக்களுடன் கத்தோலிக்கர் அல்லாத மக்களும் கலந்து கொண்டு கரங்களை உயர்த்தி வழிபடுவதைக் காண்பது ஓர் அற்புத நிகழ்வாக அமைந்தது என்று பெருமிதம் கொண்டார்.

நற்கருணையானது கிறிஸ்தவ வாழ்வுக்கு ஊற்றும் உச்சமுமாக உள்ளதென்பது ஆழமாக உணரப்பட்டது.

*செய்தி: மெர்சி அல்மெய்டா ஸ்டெலுஸ்*
*தமிழாக்கம்: த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா*

**புனித யூதா ததேயு பங்கில் நீண்டகாலம் இறைப்பணியில் அயராது ஈடுபட்ட அறுவர் பங்குத்தந்தையால் கௌரவிக்கப்பட்டனர்.**



*மேரி பாத்திமா*



*இங் ஆ சாய்*



*டேனியல் ஆரோக்கியசாமி*



*இராயப்பன் குணசேகரன்*



*அந்தோணிதாஸ் சவரிமுத்து*



*மைக்கல் ஜோசப்*

## உலக ஏழைகள் தினத்தையொட்டி திருத்தந்தையின் சிறப்புச் செய்தியின் ஒரு பகுதி

**இயேசுவின் நல்ல சமாரியர் உவமை என்பது, கடந்த காலத்திற்கு மட்டும் உரியதல்ல, மாறாக இன்றைய நம் நிலைகளைக் குறித்தும் கேள்வி எழுப்பவல்லது என உரைத்த திருத்தந்தை, ஏழைகளின் துயர்துடைக்க நாம் ஒவ்வொருவரும் அழைப்புப் பெற்றுள்ளோம் என நினைவுபடுத்தியுள்ளார்.**

**(திருத்தந்தை பிரான்சிஸ்)**

## கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்தம் பெருவிழாவன்று ஏன், நற்கருணையைக் கதிர்பாத்திரத்தில் வைத்து சாலைகளில் பவனியாகக் கொண்டு செல்கிறோம்? இது அவசியமா?

கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்தம் பெருவிழாவிற்கு ஒரு வரலாறு உண்டு. இப்பெருவிழா ஏறக்குறைய 750 ஆண்டுகளாகத் திருஅவை கொண்டாடி வருகிறது.

நற்கருணை பவனியானது அன்றும் இன்றும், நற்கருணையில் இயேசுவின் மீது நாம் கொண்ட அன்பிற்கு வெளிப் படையான சாட்சியமளிக்கின்றன. "மிகப் புனிதமான நற்கருணையை நோக்கி, குறிப்பாக கிறிஸ்துவின் உடல் மற்றும் இரத்தத்தின் புனிதத்தன்மையின் மீது நமது சாட்சியத்தை ஊர் மக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதோடு, பவனியின்போது, சிலர் நற்கருணையில் இயேசுவின் உடனிருப்பை உணர்ந்து அவரிடம், தங்கள் மன்றாட்டுக்களைச் சமர்ப்பிக்கக் கூடும். அக்காலத்தில் இயேசு தெருவில் தான் நடந்து சென்றார். அவர் ஆலயத்தில் அமர்ந்துகொண்டு உல்லாசமாகப் பொழுதைப் போக்கியவரல்ல.

வரலாற்றின் படி, தொடக்கத் திருஅவையில் நற்கருணை என்பது இயேசுவின் திருவுடலும் இரத்தமும் கொண்டதாக இறைமக்கள் நம்பி வழிபட்டனர். ஆனால் காலப்போக்கில் மத்தியக் காலத்தில் சில பேதங்கள் தோன்றின. பேதங்கள் என்றால் உணமை நம்பிக்கைக்கு எதிரான போதனைகள் எனலாம். சிலர் நற்கருணையில் ஆண்டவர் இயேசு உண்மையாக இல்லை என்றும், இது வெறும் கட்டுக்கதை என்றும் இறைமக்களைக் குழப்பினர். இது முற்றிலும் கத்தோலிக்கத் திருஅவையின் போதனைக்கு முரணான கருத்தாக இருந்தது. பலர் அந்த தப்பறையை நம்பத் தொடங்கினார். இதற்குக் காரணம், இறைமக்கள் நற்கருணையை உண்ணும் போது, அதன் நிறத்திலும், சுவையிலும் மாற்றம் ஏற்படுவதில்லை. அன்று மட்டுமல்ல, இன்றும் குழப்ப வாதிகள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஆனால், இயேசுவே, இது என் உடல், இது என் இரத்தம்' என்று அந்த புளியாத அப்பத்தைப் பார்த்துதான் கூறினார். திருப்பணியாளர்களின் துணையில் தூய ஆவியானவரே அப்பத்தையும் திராட்சை இரசத்தையும் ஆண்டவரின் திருவுடலும் திருஇரத்தமுமாக மாற்றுகிறார்.

ஆகவே, நற்கருணையில் இயேசு இல்லை என்றுரைப்பவர்கள் தூய ஆவியானவரின் செயல்பாட்டுக்கு எதிரானவர்கள் என்பதில் ஐயமில்லை.

ஆகவே, இந்த பேதம் தலைத்தூக்கிய காலத்தில். கிறிஸ்தர்கள் நற்கருணையில் ஆண்டவரின் உடனிருப்பை வெளிப் படையாக எடுத்துரைக்கவும், தங்களது ஆழந்த நம்பிக்கையை உலகத்திற்கு எடுத்துரைக்கவும் ஆலய வளாகத்தில் மட்டுமல்ல பொது இடத்திலும் நற்கருணை பவனிக்கு ஏற்பாடு செய்தனர். நற்கருணை மீதான பேதங்களும் தப்பறைகளும் முறியடிக்கப்பட வேண்டும் எனும் சூழ்நிலை அன்று ஏற்பட்டது.

மேலும், அக்காலக்கட்டத்தில் வாழ்ந்த புனித தாமஸ் அக்குவினாஸ் 1251 முதல் 1264 வரை திருத்தந்தை நான்காம் அர்பனின் (Pope Urban IV) காலத்தில் பணிபரிந்தார். இக்காலத்தில்தான் நற்கருணையையொட்டிய தப்பறை பேதம் பரவிக்கொண்டிருந்தது. இதனை தடுக்க,




நற்கருணை பெருவிழா கொண்டாட திருத்தந்தைக்குப் பரிந்துரை செய்தார் புனித தாமஸ் அக்குவினாஸ். திருத்தந்தை மற்ற சில இடங்களில் நற்கருணையில் நிகழ்ந்த அற்புதங்களையும் மனதில் கொண்டு, இயேசுவின் திருவுடல் திருஇரத்த பெருவிழாவை 1247-ல் பிரகணடம் செய்தார்.

பவனி என்பது வெற்றியைக் கொண்டாடும் ஒரு வழிமுறை. நற்கருணை இயேசுவின் திருவுடல். அவர் சாவை வென்றவர். இதை உலகிற்கு எடுத்துரைக்க வேண்டும். நற்கருணையின் வெற்றி வாகை நமக்குத் தெரியும், ஊருக்குத் தெரியாது. தெரியப்படுத்துவது நமது மறைத்துப் பணியாகும்.

*-ஆர்.கே.*

## அஞ்சுவதற்கு மட்டுமே அஞ்சுவோம்!

பொதுக் காலத்தின் பன்னிரண்டாம் ஞாயிறான இன்று நாம் வாசிக்கக்கேட்கும் இறைவாசகங்கள், "அஞ்சாதீர்கள், ஆண்டவர் என்றும் நம்மோடு" என்ற சிந்தனையை வழங்குகின்றது. ஆண்டவர் நம்மோடு இருக்கும்போது அவரின் துணைகொண்டு நாம் என்ன செய்ய வேண்டும் என்று நாம் சிந்திப்போம். இன்றைக்கு மனிதர்களாகிய நாம் எதற்கெல்லாமோ பயப்படுகின்றோம். இயற்கை சீற்றத்தைக் கண்டு பயப்படுகின்றோம், இருளைக் கண்டு பயப் படுகின்றோம், தண்ணீரை, கொரோனா நோயைக் கண்டு பயப்படுகின்றோம். இன்னும் பிற காரியங்களைக் கண்டு பயப்படுகின்றோம். ஆகவே இன்றைய இறைவார்த்தையின் வழியாக இறைவன் நமது அச்ச உணர்விற்கு எப்படி விடுதலை தருகிறார் என பார்ப்போம்.

மத்தேயு எழுதிய நற்செய்தி நூலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, 'அஞ்சாதீர்கள்' எனச் சொல்கிறார். ஒருமுறையோ, இருமுறையோ அல்ல, மூன்றுமுறை சொல்கிறார். இதன் அர்த்தம் நாம் ஆண்டவரைத் தவிர வேறு எதற்கும் பயப்படக்கூடாது என்பதே ஆகும். கடவுளின் வார்த்தையை எடுத்துரைக் கின்றபொழுது மனிதர்களிடமிருந்து எதிர்ப்புகள் வரலாம். ஏனெனில், அவர்கள் இவ்வுலகைச் சார்ந்தவர்கள் அல்லர்; அதனால் உலகம் அவர்களை வெறுக்கும், கொல்லவும் செய்யும் (யோவா 17:14) அதனால்தான் இயேசு இவ்வுலகைச் சார்ந்தவர்களுக்கு அல்லது உடலை மட்டுமே கொல்பவர்களுக்கு அஞ்சவேண் டாம் என்கின்றார். எது எதற்கெல்லாம், யாருக்கெல்லாம் பயப்படக்கூடாது என்பதையும் ஆண்டவர் இயேசு குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

இயேசு தன்னுடைய பணிவாழ்வில் தனக்கெதிராக வந்த விமர்சனங்களைக் கண்டு பயப்படவே இல்லை. மக்கள் அவரை பேய்களின் தலைவனாகிய பெயல்செபூலைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறான், பெருந்தீனிக்காரன், பாவி களின் நண்பன் என்றெல்லாம் விமர்சனம் செய்தார்கள். அவற்றையெல்லாம் இயேசு கண்டு பயப்படவில்லை. காரணம் அவற்றில் உண்மையில்லை. எல்லா விமர்சனங்களும் பொறாமையின் அடிப்படையில் எழுந் தவை. ஆகவே, நாமும் ஆண்டவர் இயேசுவைப் போன்று நம்மீது சுமத்தப்படும் தேவையற்ற விமர்சனங்களைக் கண்டு பயம்கொள்ளாமல், துணிந்து நடக்கும் குணத்தை நாம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதுதான் இயேசு நம்மிடமிருந்து எதிர்பார்ப்பதாக இருக்கின்றது.

மனிதர்களுக்கு அல்ல, ஆண்டவருக்கு அஞ்சி, அவருக்குப் பணிசெய்யச் சொல்லும் இயேசு, அப்படிப் பணிசெய்வோருக்கு என்ன கைம்மாறு கிடைக்கும் என்பதை இன்றைய நற்செய்தியின் இறுதியில் அழகாக எடுத்துக்கூறுகின்றார். 'மக்கள் முன்னிலை யில் என்னை ஏற்றுக்கொள்பவரை விண்ணுலகில் இருக்கும் என் தந்தையின் முன்னிலையில் நானும் ஏற்றுக்கொள்வேன்' என்கிறார். .

நிறைவாக ஆண்டவர் இயேசு அஞ்சா தீர்கள் என்று எதற்காகச் சொல்கிறார் என்று பார்க்கும்போது படைப்பின் மணிமகுடமாக இருக்கும் மனிதருக்கு கடவுள் எவ்வளவோ மேலான காரியங்களைச் செய்வார். ஆகையால் நாம் அஞ்சத் தேவையில்லை என்பதுதான் ஆண்டவர் இயேசு நமக்குத் தரும் ஆறுதலின் செய்தியாக இருக்கின்றது.

*த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா*

**ஆண்டின் பொதுக்காலம் 12-ம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | எரே 20: 10-13 |
| பதிலுரை | 69: 7-9. 13,16. 32-34 |
| 2 வாசகம் | உரோ 5: 12-15 |
| நற்செய்தி | மத்தேயு : 10:26-33 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 4**